


# பட்டினத்தார் புலம்பல்

நடப்பது எனக்கு மிகவும் பிடிக்கும்.

சர்க்கரை நோய், ரத்த அழுத்தம் போன்றவற்றுக்காக டாக்டர்கள் நோயாளிகளை நடக்கச் சொல்கிறார்கள். பெரும்பாலோருக்கு அது முடிவதில்லை. சிலர் என்னதான் நடக்கும் நடக்கட்டுமே என்கிறார்கள். சிலர் எது நடந்ததோ அது நன்றாகவே நடந்தது, எது நடக்கிறதோ அது ... என்று ஆரம்பித்து (நடக்காமலே) முக்காலத்துக்கும் திருப்தியடைந்து விடுகிறார்கள். எந்த பீச்சிலும் வருடக்கணக்கில் நடப்பவர்களின் தொப்பை முதல் முழு உடலும் எந்த தோற்றமும் மாறாமல் அப்படியே இருக்கிறது. கேட்டால் இன்னும் தொப்பை அதிகம் ஆகாமல் இருப்பதற்கு நடையே காரணம் என்பார்கள்.

டாக்டர் சொல்வதற்கு முன்னால் வரை நான் சென்னையில் கடந்த முப்பதாண்டுகளில் நிறைய நடந்திருக்கிறேன். வித விதமான காரணங்களுக்காக. பஸ்சுக்குக் காசில்லாமல், அண்ணா சாலையிலிருந்து டெய்லர்ஸ் ரோடுக்கு. காசிருந்தும் காதலியுடன் பேசுவதற்காக யுனிவர்சிட்டியிலிருந்து மயிலாப்பூருக்கு. இலக்கிய, அரசியல் விவாதங்களின் சூட்டில் எங்கே போகிறோம் என்பதைப் பற்றியே கவலையில்லாமல் நண்பர்களுடன் சென்னையின் பல பகுதிகளுக்கு.

இப்போதும் முடிந்தபோதெல்லாம் நடக்கிறேன்.

ஆனால் சென்னை நகரம் நடப்பவர்களை மதிக்காத நகரம். நகராட்சி முதல் நாலு சக்கரக்காரர்கள் வரை யாரும் நடப்பவர்களை மதிப்பதில்லை. புதிய மேம்பாலங்கள் வந்த பிறகு நடப்பது இன்னும் கடினமாகிவிட்டது. பெரும்பாலான மேம்பாலங்களுக்குக் கீழே வலது இடது பக்கங்களில் நடப்பது யுத்த பூமியில் குண்டு வீச்சுக்கு தப்பி பதுங்கி ஊர்ந்து ஒதுங்கிச் செல்வது போலிருக்கிறது. அடையாறு ஆழ்வார்பேட்டை பகுதிகளில் பல முதியவர்கள் இந்த இடங்களில் படும் பாட்டை வர்ணிக்க முடியாது. பல்லி மாதிரி சாலையோரச் சுவரில் ஒட்டிக் கொள்கிறார்கள்.

சென்னையில் காணாமல் போய்க் கொண்டிருக்கும் பல பழைய விஷயங்களில் ஒன்று - நடைபாதை.

The City Forum

11.9.2004